சுருக்கம்

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2017–18–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – "சென்னை மாவட்டத்தில் அச்சுக்கலை தொடர்பான சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம்" அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை

அரசாணை (நிலை) எண்.31 நாள் 01.03.2018

திருவள்ளுவராண்டு, 2049
ஹேவிளம்பி வருடம், மாசி–17

படிக்கப்பட்டது:–

பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண். 5894/உ1/2017, நாள் 13.02.2018.

~*~~*~

ஆணை:–

2017–18–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

> "தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் தனித்தன்மை வாய்ந்த பொருள் சார்ந்த நூலகங்கள் மற்றும் காட்சிக்கூடங்கள் அமைக்கப்படும். சிந்து சமவெளி நாகரிகம் உள்ளிட்ட பழம்பெரும் நாகரிகங்கள் குறித்த சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம் சிவகங்கை மாவட்டம் கீழடியிலும், தமிழிசை, நடனம் மற்றும் நுண்கலைகள் குறித்து தஞ்சாவூரிலும், நாட்டுப்புறக் கலைகள் சார்ந்து மதுரையிலும், தமிழ் மருத்துவம் சார்ந்து திருநெல்வேலியிலும், பழங்குடியினர் பண்பாடு சார்ந்து நீலகிரியிலும், கணிதம், அறிவியல் சார்ந்து திருச்சியிலும், வானியல், புதுமைக் கண்டுபிடிப்புகள் சார்ந்து கோயம்புத்தூரிலும், அச்சுக்கலை சார்ந்து சென்னையிலும் இவை அமைக்கப்படும். மேற்கண்ட சிறப்பு நூலகங்கள் மற்றும் காட்சிக் கூடங்கள் ஒவ்வொன்றும் ஒரு கோடி செலவில் மொத்தம் ரூ.8 கோடி செலவில் அமைக்கப்படும்".

2. பொது நூலக இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், இந்திய மொழிகளிலே அச்சு இயந்திரத்திற்கு அறிமுகமான முதல் மொழி என்ற பெருமையை பெற்றுள்ள தமிழ்மொழியின் பழம்பெரும் பாரம்பரியமிக்க அச்சுக்கலையின் வரலாற்றை எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் வகையில், சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுக் கட்டடத்தின் மூன்றாம் தளத்தில் காலியாக உள்ள சுமார் 3,900 சதுரடி பரப்பளவு கொண்ட இடத்தில் "அச்சுக்கலை தொடர்பான சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம்" அமைக்க தேவையான உள்கட்டமைப்புப் பணிகள் மற்றும் இதரசெலவினங்களை கீழ்க்கண்டவாறு மேற்கொள்வதற்கும், அதற்கான செலவினத் தொகை ரூ.46,46,230/–ஐ (ரூபாய் நாற்பத்தாறு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து இருநூற்று முப்பது மட்டும்) தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக

நிதியிலிருந்து பெற்று மேற்கொள்ளவும் அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்:–

(அ) உள்கட்டமைப்புப் பணிகள்

| வ. எண். | பொருள் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Aluminium Partition (2,050 Sft X Rs.430) | ரூ.8,81,500/– |
| 2. | Renewing the damaged false ceiling with new Gyp board false ceiling. (3,900 Sft X Rs.170) | ரூ.6,63,000/– |
| 3. | Electrical fitting, Fan, Light fitting estimate A.C. fittings proportion (600 unit X Rs.384) | ரூ.2,30,000/– |
| 4. | Toilet door and Tiles Fitting, washbasin fitting and Urinal fitting (5 unit X Rs.26000) | ரூ.1,30,000/– |
| 5. | Repainting the walls with two coats with first class quality Exterior Emulsion Paint. | ரூ.1,07,730/– |
| 6. | Interior Decoration (3,900 Sft X Rs.60) | ரூ.2,34,000/– |
| | **Total** | ரூ.22,46,230/– |

(ஆ) அச்சுக்கலை தொடர்பாக காட்சிக்கூடம் அமைப்பதற்கான பணிகள்

| வ. எண் | பொருள் | உத்தேச மதிப்பீடு |
|---|---|---|
| (I) | அச்சுக்கலை வரலாறு தொடர்பான சித்திரங்கள்<br>I. அச்சுக்கலை முன்னோடிகள்<br>II. அச்சு இயந்திரங்கள்<br>III. அச்சு பொருட்கள்<br>IV. அரிய நூல்கள் | ரூ.5.00 இலட்சம் |
| (II) | அச்சுக்கலை வரலாறு தொடர்பான சுவரொட்டிகள் (Wall Hangers) | ரூ.1.00 இலட்சம் |
| (III) | தளவாடங்கள்<br>I. நூலடுக்குகள் (Racks)<br>II. படச்சுருள் (Video)<br>III. சேகரிப்பான் (Wood file film cabinets)<br>IV. Flat Files (Racks) | ரூ.5.00 இலட்சம் |
| (IV) | நூல்கள்<br>(i) அச்சுக்கலை தொடர்பான தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள்<br>(ii) அரிய அச்சு நூல்கள் | ரூ.5.00 இலட்சம் |
| (V) | ஒலி மற்றும் ஒளி காட்சிப்படுத்துதல் | ரூ.5.00 இலட்சம் |
| (VI) | நாற்காலிகள் | ரூ.1.00 இலட்சம் |
| (VII) | இணையதளம் (website creation – Hardware and software) | ரூ.2.00 இலட்சம் |
| | மொத்த தொகை | ரூ.24.00 இலட்சம் |

3. பொது நூலக இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை ஏற்று, சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுக் கட்டடத்தின் மூன்றாம் தளத்தில் காலியாகவுள்ள சுமார் 3900 சதுரடி பரப்பளவு கொண்ட இடத்தில் "அச்சுக்கலை தொடர்பான சிறப்பு நூலகம் மற்றும் காட்சிக்கூடம்" அமைப்பதற்கும் மற்றும் அதற்கான செலவினத் தொகையான ரூ.46,46,230/—ஐ (ரூபாய் நாற்பத்தாறு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து இருநூற்று முப்பது மட்டும்) தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக நிதியிலிருந்து பெற்று மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.609/கூ.த.செ.(நிதி)/2018, நாள் 20.02.2018ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை – 2.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்,
சென்னை–6.
<u>நகல்:–</u>
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை
முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மைத் தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்